# ஜெயங்கொண்டம் நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR NO</th><th>SERIAL NUMBER AND SUBJECT IN THE AGENDA</th><th>DECISION OF THE COUNCIL</th></tr>
<tr><td>31.01.2018</td><td></td><td>ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2018ம் ஆண்டு ஜனவரி மாதம் 31.01.2018ம் புதன் கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.<br><br>தனி அலுவலர்,<br>ஜெயங்கொண்டம் நகராட்சி</td><td></td></tr>
<tr><td>31.01.2018</td><td>1060</td><td><u>பொருள் எண். 1</u><br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் வருவாய் நிதி - 2017-2018-ன் கீழ், காமராஜபுரம் மாரியம்மன் கோவில் சந்து, ஜுப்ளி சாலை குறுக்கு சந்து மற்றும் சின்னவளையம் தெற்கு தெரு ஆகிய பகுதிகளில் சிறுபாலம் அமைத்தல் பணி மேற்கொள்ள 27.04.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு (சதவிகிதத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.K. அன்புராஜ் மணக்கரை</td><td rowspan="2">1,55,093.40</td><td>1,54,920/-</td><td>(-) 0.11% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.G.சேகர் ஜெயங்கொண்டம்</td><td>1,56,555/-</td><td>(+) 0.94% கூடுதல்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.K. அன்புராஜ், ஒப்பந்ததாரர், மணக்கரை என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br><u>ந.க.எண். 538/2017/இ1</u></td><td>அனுமதி அளிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.01.2018</td><td>1061</td><td><u>பொருள் எண். 2</u><br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் வருவாய் நிதி - 2017-2018-ன் கீழ், நவீன எரிவாயு தகன மேடை வளாகத்தில் ஆழ்குழாய் கிணறு மற்றும் மின் மோட்டார் அமைத்தல் பணி மேற்கொள்ள 27.04.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு (சதவிகிதத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.K. அன்புராஜ் மணக்கரை</td><td rowspan="2">6,14,198/-</td><td>6,13,189/-</td><td>(-) 0.16% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.G.சேகர் ஜெயங்கொண்டம்</td><td>6,16,770/-</td><td>(+) 0.42% கூடுதல்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u></td><td>அனுமதி அளிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.K. அன்புராஜ், ஒப்பந்ததாரர், மணக்கரை** என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**<u>ந.க.எண். 538/2017/இ1</u>** | |
| 31.01.2018 | 1062 | **<u>பொருள் எண். 3</u>**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி– சின்னவளையம் பகுதியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தில் (IUDM) கட்டப்பட்ட 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியின் மேல் பகுதியில் தண்ணீர் கசிந்து வீணாவதை சரி செய்திடும்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வின் போது அறிவுரை வழங்கியுள்ளார்கள். அதன் பேரில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியினை சீரமைப்பு செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>குடிநீர் பணியின் அவசியம் கருதி பணி செய்யவும், அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். | அனுமதி அளிக்கப்பட்டது |
| 31.01.2018 | 1063 | **<u>பொருள் எண். 4</u>**<br>ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட சிதம்பரம் சாலையில் சாலையை ஆக்கிரமித்து போக்குவரத்திற்கு இடையூறாக நரிக்குறவர்கள் வசித்து வந்தனர். தற்போது அவர்கள் மகிமைபுரம் பகுதிக்கு குடி பெயர்ந்துள்ளனர். அப்பகுதியில் குடிநீர் வசதி இல்லாததால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடி பார்வையின் போது குடிநீர் வசதி செய்து தரும்படி உத்தரவிட்டதற்கிணங்கவும், கோடைக்காலமாக இருப்பதாலும் மூன்று இடங்களில் Sintex தொட்டி அமைக்கவும், ஆழ்குழாய் கிணறு அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.85 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து பணியை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம். | அனுமதி அளிக்கப்பட்டது |
| 31.01.2018 | 1064 | **<u>பொருள் எண். 5</u>**<br>அனைத்து நகராட்சிகளிலும் Liquid குளோரினேஷன் இயந்திரம் அமைத்து குடிநீர் விநியோகிக்கப்பட வேண்டும் என நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். அதன் பேரில் இந்நகராட்சியில் 15 இடங்களில் Liquid குளோரினேஷன் இயந்திரம் பொருத்தி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது டிசம்பர் 2017 முதல் மார்ச் 2018 முடிய மாதம் ஒன்றுக்கு 6500 லிட்டர் வீதம் Liquid குளோரினேஷன் பெறுவதற்கு மொத்த தொகை ரூ.4,68,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>குடிநீர் பணியின் அவசியம் கருதி பணி செய்யவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><u>ந.க.எண். 1138 / 2017 / இ1</u> | அனுமதி அளிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 31.01.2018 | 1065 | **பொருள் எண். 6**<br>அரியலூர் மவாட்ட ஆட்சியர் அவர்களது கூட்ட அறிவுரைகளின் படி பொதுசுகாதாரப் பிரிவில் வார்டுவாரியாக தெருவில் உள்ள வீடுகளில் டெங்கு கொசு ஒழிப்பு நடவடிக்கை பணிகள் தீவிரமாக கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் ( DBC )போதுமான பணியாளர்களை ஜனவரி 2018 முதல் மார்ச் 2018 வரை அமர்த்திக் கொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.11.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>ந.க.எண். 836/2016/அ3. | அனுமதி அளிக்கப்பட்டது |
| 31.01.2018 | 1066 | **பொருள் எண்.7**<br>செயங்கொண்டம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித்திட்டம் 2016–17 கீழ் சிப்பம் எண்–1க்கு 198.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் M/s. SPT & CO. பெரம்பலூர் அவர்கள் குறைந்த விலைப்புள்ளி வழங்கி பணி உத்தரவு பெறப்பட்டு பணி முடிக்கப்பட்டது.<br>பணி நடைப்பெறும் சமயம் பொது மக்கள் நலன் மற்றும் போக்குவரத்து வசதிக்காக அனைத்து சாலைக்கும் முகப்பு விரிவாக்க பகுதி (Bell Mouth) அமைக்கப்பட்டுள்ளதால், வேலையின் மொத்த தொகை ரூ.2,00,03,178/–க்கு செய்யப்பட்டது. எனவே, கூடுதல் செல்வினம் ரூ.2,03,178/– வருவாய் நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்க வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–**<br>ஒப்பந்ததாரர் M/s. SPT & CO. பெரம்பலூர் அவர்களுக்கு தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1027/2017/இ1) | அனுமதி அளிக்கப்பட்டது |
| 04.02.2018 | 1067 | **பொருள் எண். 8**<br>செயங்கொண்டம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித்திட்டம் 2016–17 கீழ் சிப்பம் எண்–1க்கு 198.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் M/s. SPT & CO. பெரம்பலூர் அவர்கள் குறைந்த விலைப்புள்ளி வழங்கி பணி உத்தரவு பெறப்பட்டு பணி முடிக்கப்பட்டது.<br>பணி நடைப்பெறும் சமயம் மழைக்காலங்களில் மழை நீர் தேங்கி தார்சாலைகள் பழுதடையும் காரணத்தாலும், மேலும் பொது மக்கள் நலன் கருதி மழைநிர் தேங்கினால் பொது மக்களுக்கு சுகாதார கேடு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு தார்சாலையின் குறுக்கே RCC பைப் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கொம்பேடு பகுதியில் ஏற்கனவே இருந்த மெட்டல தளம் மழைக்காலங்களில் மிகவும் பழுதடைந்ததால் பணி மேற்கொள்ளும் சமயம் Granular Sub-Base அமைக்க WMM அமைக்க வேண்டி உள்ளது. எனவே, அதற்குண்டான செலவின தொகை ரூ.6.00 லட்சம் வருவாய் நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–**<br>ஒப்பந்ததாரர் M/s. SPT & CO. பெரம்பலூர் அவர்களுக்கு தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதி அளிக்கப்பட்டது |
| | 1068 | **பொருள் எண்.–9**<br>செயங்கொண்டம் நகராட்சியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி (O.H.T.) இயக்குபவர் மற்றும் காவலர் பணியிடத்தில் முற்றிலும் தற்காலிக பணியாளர்களைக் கொண்டு பணி மேற்காள்ள 01.01.2018 முதல் 31.03.2018 முடிய ஒப்பந்தம் அடிப்படையில் 13 நபர்களைக் கொண்டு நாளொன்றுக்கு ரூ.309/–வீதம் (பொதுப்பணி துறையின் விலை விகிதப்படி) அமர்த்திக்கொள்ளவும், தற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது. | அனுமதி அளிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலகக் குறிப்பு–</u>**<br>பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.746/2015/இ1 | |